

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 41
கதிர் : 185

சனிக்கிழமை
30 மே 2026

வைகாசி 16 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2057

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

புதிய அரசியலமைப்பு ஊடாக

## தமிழ்மக்களுக்கு அரசியல் உரிமை

அமைச்சர் ஹர்ஷன தெரிவிப்பு

**கொழும்பு, மே 30**

**புதிய அரசியலமைப்பு நிச்சயம் உருவாக்கப்படும். அதன் ஊடாக வடக்கு, கிழக்கு மற்றும் மலையக மக்களுக்கு அரசியலமைப்பு சார்ந்த உரிமைகளை பெற்றுக்கொடுப்போம் - இவ்வாறு நீதியமைச்சர் ஹர்ஷன தெரிவித்தார்.**

»11



## வலி.வடக்கு காணிகள் தமிழர்களின் சொத்து!

இராணுவமே வெளியேறு
மயிலிட்டியில் போராட்டம்

யாழ்ப்பாணம், மே 30
வலிகாமம் வடக்கிலிருந்து இராணுவம் உடனடியாக வெளியேறி அந்தக் காணிகளைத் தம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்று பொதுமக்கள் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

»11

பலாங்கொட கஸ்ஸப்ப தேரருக்கு எதிராக

## அவதூறு வழக்கு கோரிய விண்ணப்பம் நிராகரிப்பு!

விரிவு பக்கம்:-11

## எதிர்க்கட்சியிலேயே ஹர்ஷ தொடர்வார்!

திசைகாட்டி அரசாங்கத்தில்
இணையும் பேச்சு இல்லை

கொழும்பு, மே 30
நிதியமைச்சு பதவியைப் பெறுவதற்காக திசைகாட்டி அரசாங்கத்தில் ஹர்ஷ டி சில்வா இணையவுள்ளார் என்று வெளிவரும் தகவல்களை பிரதான எதிர்க்கட்சி

»11

வவுனியாவில்

## புலிகளின் புதையலை தேடும் முயற்சி தோல்வி

வவுனியா, மே 30
வவுனியா கற்குளம் சாஸ்திரிகூளாங்குளம் பகுதியில் விடுதலைப்புலிக ளால் புதைத்து வைக்கப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் ஆயுதங்கள் மற்றும் நகைகளைத் தேடி மேற்கொள்ளப் பட்ட அகழ்வு நடவடிக்கை

»11

நயினாதீவு அதிபரின் சாவு



## படகோட்டிக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், மே 30
நயினாதீவு ஸ்ரீகணேச கனிஷ்ட மகாவித்தியாலய அதிபரான நடராசா மயூரன் கடலில் தவறி வீழ்ந்து உயிரிழந்த நிலையில், படகோட்டி கைது

»11

## அரச உயர் மட்டத்துக்கு பஸிலுடன் தொடர்பு

போட்டுடைத்தார் நாமல்

கொழும்பு, மே 30
திசைகாட்டி அரசாங்கத்தின் உயர் மட்டங்களுக்கு பஸில் ராஜபக்சவுடன் நெருங்கிய தொடர்பு உள்ளது - இவ்வாறு நாமல் ராஜபக்ச தெரிவித்தார். ஊடகவியலாளர் சந்திப்பொன்றில், 'சட்டம்,

»11

தெல்லிப்பழை புற்றுநோய்ப் பிரிவு

## மருத்துவர் மீதான அவதூறு ஜூன் 19ஆம் திகதி கட்டளை!

யாழ்ப்பாணம், மே 30
தெல்லிப்பழைபுற்றுநோய்ப் பிரிவு மருத்துவர் மீதான அவதூறு வழக்கில், நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் உள்ளிட்டோருக்கு எதிராக தாக்

»11

காணாமற்போன மீனவர்களை

## ஹெலிகொப்டர் மூலம் விமானப்படை தேடுதல்

அரச தரப்பு தெரிவிப்பு
மீனவர்கள் மறுப்பு

யாழ்ப்பாணம், மே 30
வடமராட்சி கடலில் காணாமற்போயிருந்த நான்கு மீனவர்களை மீட்கும் பணிகள் கடற்படைக் கலன்கள் மற்றும் ஹெலிகொப்டர்கள் மூலம் முன்னெடுக்கப்பட்டதாக அரச தரப்பு தெரிவித்திருந்த நிலையில், அந்தத் தகவல்களை மீனவர்கள் மறுத்துள்ளனர். காணாமற்போன மீனவர்களை தேடும் பணிகளை சக மீனவர்கள் தங்களின் கூட்டு முயற்

»11



## காணாமற்போன மீனவர்களை தேடும் நடவடிக்கைகள் தீவிரம்

24க்கும் மேற்பட்ட படகுகள் களத்தில்

சுழியோடிகள் சகிதம் தேடுதல்

இரண்டாம் நாள் பணிகள் தோல்வி

யாழ்ப்பாணம், மே 30
வடமராட்சிக் கடற்பரப்பில் காணாமற்போன மீனவர்களை மீட்கும் நடவடிக்கை இரண்டாம் நாளான நேற்றுத் தோல்வியில் முடிந்தது. பருத்தித்துறை முனை மற்றும் கற்கோவளம் பகுதிகளில் இருந்து கடற்றொழில் நடவடிக்கைக்காக இரண்டு படகுகளில் சென்ற நான்கு மீனவர்கள் நேற்றுமுன்தினம் காணாமல் போயிருந்தனர். அவர்களை மீட்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்ட நிலையில் அந்தப் பணிகள் தோல்வியில்

»11




மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 29.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4446 |
| ஆங்கில எழுத்து | A |
| வெற்றி இலக்கங்கள் | 41 50 62 76 |
| விசேட எழுத்து | A |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 29.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1513 |
| வெற்றி இலக்கினம் | ரிஷபம் |
| வெற்றி இலக்கங்கள் | 03 11 43 56 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 29.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0472 |
| ஆங்கில எழுத்து | I |
| வெற்றி இலக்கங்கள் | 6 7 5 5 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 29.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2552 |
| ஆங்கில எழுத்து | N |
| சுப்பர் இலக்கம் | 15 |
| வெற்றி இலக்கங்கள் | 13 29 41 43 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 29.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 6204 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 5 1 7 4 1 1 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 29.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2234 |
| ஆங்கில எழுத்து | S |
| வெற்றி இலக்கங்கள் | 07 26 55 81 |
| விசேட எழுத்து | S |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 29.05.2026 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0320 |
| வெற்றி இலக்கினம் | கடகம் |
| வெற்றி இலக்கங்கள் | 11 21 59 |

# எரிபொருள்களின் விலை தற்போதைக்குக் குறையாது

## பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவிப்பு

கொழும்பு, மே 30

**உலக சந்தை நிலைவரங்களின்படி, எதிர்காலத்தில் நாட்டில் மேற்கொள்ளப்படவுள்ள எரிபொருள் விலைத் திருத்தத்தின் போது விலைக் குறைப்பை எதிர்பார்க்கமுடியாது என இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மயூர நெத்திகுமாரகே தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மத்திய கிழக்குப் போருக்கு முன்னர் உலக சந்தையில் நிலவிய எரிபொருள் விலையைவிட தற்போதைய விலை இன்னும் அதிகமாகவே உள்ளது.

அதற்கமைய அந்த நிலைமைகளைப் பரிசீலித்த பின்னரே உள்நாட்டு எரிபொருள் விலை குறித்து இறுதி முடிவு எடுக்கப்படும். ஆனால், எரிபொருள் விலைகள் தொடர்பாக இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. அதேவேளை மசகு எண்ணெய்க் கப்பல் ஒன்று நேற்றுமுன்தினம் நாட்டை வந்தடைந்துள்ளது. அந்தக் கப்பலில் 89,000 மெற்றிக் தொன் மசகு எண்ணெய் உள்ளது. மேலும், எதிர்வரும் 31ஆம் திகதியளவில் 'மேர்பன்' ரக மசகு எண்ணெய்க் கப்பல் ஒன்று மீண்டும் நாட்டை வந்தடையவுள்ளதுடன், அந்தக் கப்பலில் 95,000 மெற்றிக் தொன் மசகு எண்ணெய் உள்ளது - என்றார். (ச-இ)



## ரூபா வீழ்ச்சி

கொழும்பு, மே 30

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி நேற்று வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்டுள்ள நாளாந்த நாணய மாற்று விகித அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 324.45 ரூபாவாகப் பதிவாகியுள்ளது. அத்துடன் அதன் விற்பனைப் பெறுமதி 334.24 ரூபாவாகக் காணப்படுகின்றது.

கடந்த 27ஆம் திகதி அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 320.40 ரூபாவாகவும், விற்பனைப் பெறுமதி 330.81 ரூபாவாகவும் பதிவாகியிருந்தது. (ச-இ)

## ஏப்ரல் மாத ஏற்றுமதியில் ஆடைத்துறை வீழ்ச்சி!


கொழும்பு, மே 30

2026 ஏப்ரல் மாதத்தில் இலங்கையின் ஆடை ஏற்றுமதி வீழ்ச்சியடைந்துள்ளது. மொத்த ஏற்றுமதி 4.72 வீதத்தால் குறைந்து 328.15 மில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியுள்ளது என்று ஒன்றிணைந்த ஆடைச் சங்கங்களின் மன்றம் தெரிவித்துள்ளது.

இது கடந்த 2025 ஏப்ரலில் 344.40 மில்லியன் டொலராக இருந்தது. பாரம்பரிய சந்தைகளான பிரிட்டனுக்கான ஏற்றுமதி 16.91, ஐரோப்பிய ஒன்றியத்துக்கான ஏற்றுமதி 8.78 மற்றும் அமெரிக்காவுக்கான ஏற்றுமதி 3.46 எனக் குறைந்துள்ளன.

இருப்பினும், மற்றைய புதிய சந்தைகளுக்கான ஏற்றுமதி ஏப்ரல் மாதத்தில் 12.61 வீத வளர்ச்சியடைந்துள்ளது. புதிய சந்தைகளை நோக்கி வணிகத்தை மாற்றுவதன் மூலம் இந்தத் துறையை மேலும் வலுப்படுத்த முடியும் என்பதை இது காட்டுகிறது. 2026 ஜனவரி முதல் ஏப்ரல் வரையிலான காலப்பகுதியில், மொத்த ஆடை ஏற்றுமதி 7.47 வீதத்தால் குறைந்து 1.53 பில்லியன் அமெரிக்க டொலராக வீழ்ச்சியடைந்துள்ளது. இந்த வீழ்ச்சி உலகளாவிய தேவை குறைபாட்டைப் பிரதிபலித்தாலும் இலங்கை தனது போட்டித்திறனை அதிகரிக்க வேண்டும், செலவு அமைப்புகளைச் சீரமைக்க வேண்டும், சந்தை வாய்ப்புகளை வலுப்படுத்த வேண்டும் மற்றும் அதிக மதிப்புமிக்க புதிய வாய்ப்புகளை நோக்கி வேகமாக நகரவேண்டும்.

இலங்கைக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் மிக முக்கியமான துறைகளில் ஒன்றாக ஆடைத்தொழிற்றுறையை கட்டியெழுப்ப நடவடிக்கை அவசியமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## தட்டிக் கேட்டவர் தாக்கிக் கொலை

கொழும்பு, மே.30

கொழும்பு - கிராண்ட்பாஸ் பகுதியில் நபர் ஒருவர் தாக்கப்பட்டு நேற்றுக் கொலை செய்யப்பட்டுள்ளார். உயிரிழந்தவர் கொழும்பு-15 பகுதியைச் சேர்ந்த 65 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது. வீட்டுக்கு அருகில் முச்சக்கரவண்டியை நிறுத்தி களியாட்டங்களில் ஈடுபட்ட சிலருடன் இடம்பெற்ற வாக்குவாதத்தில் அவர் மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை கைதுசெய்வதற்கு பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ச-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 29.05.2026 | வெள்ளிக்கிழமை | 0912 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| U | 0 3 1 6 3 8 | |

| Super Ball DLB | | | |
|---|---|---|---|
| திகதி | 29.05.2026 | தினம் | வெள்ளிக்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| 3178 | B | 09 37 51 63 | |

| சனிதா DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 29.05.2026 | வெள்ளிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| M | 14 74 77 79 | 5339 |


| SASIRI DLB | |
|---|---|
| திகதி | தினம் |
| 29.05.2026 | வெள்ளிக்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 1008 | 09 11 12 |

| லக்ன ராசி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 29.05.2026 | வெள்ளிக்கிழமை | |
| தனுஷம் | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| | 26 28 36 40 | 4890 |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | 29.05.2026 | தினம் | வெள்ளிக்கிழமை |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| B | 33 | 12 27 44 53 | 2354 |

| அத கோடிபதி DLB | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 29.05.2026 | வெள்ளிக்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| Q | 09 42 56 64 | 3004 |

## நெடுந்தாரகை, வடதாரகை அடுத்த மாதம் சேவையில்



யாழ்ப்பாணம், மே 30

'நெடுந்தாரகை' மற்றும் 'வடதாரகை' ஆகிய இரு பயணிகள் படகுகளதும் திருத்தப் பணிகள் நிறைவடைந்ததும், அடுத்த மாதம் நடுப்பகுதியில் மீண்டும் சேவைக்குத் தயாராகும் என்று வட பிராந்தியக் கடற்படைத் தளபதி தெரிவித்தார். தீவகப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் எதிர்கொள்ளும் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பான விசேட கலந்துரையாடலில் அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது போக்குவரத்து நிலைமைகள் ஆராயப்பட்டன.

முக்கியமாக நெடுந்தீவு மக்களின் கடற்போக்குவரத்தில் ஏற்பட்டுள்ள இடையூறுகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. அதேவேளை படகுகளின் திருத்தப்பணிகள் காரணமாக, போக்குவரத்துக்காக வாடகைப் படகொன்றை அமர்த்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அது தொடர்பான தரநிர்ணயப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் என்று அதிகாரிகள் இதன்போது தெரிவித்தனர். (கு-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# அத்தியாவசிய சேவைகளாக 15 சேவைகள் பிரகடனம்!

## வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, மே 30

மின்சாரம், குடிதண்ணீர், சுகாதாரம், உணவு மற்றும் போக்குவரத்து, தகவல் தொடர்பு உட்பட 15 சேவைகளை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தி விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வின் பணிப்புரைக்கு அமைய இந்த வர்த்தமானி வெளியாகியுள்ளது.

ஜனாதிபதியின் செயலாளர் என். எஸ். குமாநாயக்கவின் கையொப்பத்துடன் வெளியாகியுள்ள இந்த வர்த்தமானி அறிவித்தலில் மின்சார விநியோகம் தொடர்பான அனைத்துச் சேவைகள், பெற்றோலியப் பொருள்கள் மற்றும் எரிவாயு உள்ளிட்ட எரிபொருள் விநியோகம், மருத்துவமனைகள், பராமரிப்பு நிலையங்கள், மருந்தகங்கள் ஆகியவற்றில் நோயாளர்களின் பராமரிப்பு மற்றும் சிகிச்சை தொடர்பான அனைத்துச் சேவைகள், பயணிகள் அல்லது பொருள்கள் போக்குவரத்திற்கான பொதுப் போக்குவரத்துச் சேவைகள், வீதிகள், பாலங்கள், விமான நிலையங்கள், துறைமுகங்கள் மற்றும் ரயில் பாதைகள் உள்ளிட்ட போக்குவரத்து மற்றும் சுற்றுலா வசதிகளைப் பேணுதல், நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சேவைகள், உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை வழங்குதல், பாதுகாத்தல் மற்றும் விநியோகித்தல், மாவட்ட, பிரதேச செயலகங்கள், கிராம உத்தியோகத்தர்கள், சமூர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் களமட்ட அதிகாரிகள் மூலமாக ஆற்றப்பட வேண்டிய அனைத்துச் சேவைகள், அம்புலன்ஸ் சேவைகள், இலங்கை மத்திய வங்கி உட்பட அனைத்து அரச வங்கிகள் மற்றும் காப்புறுதிச் சேவைகள், உள்ளூராட்சிமன்றங்களினால் வழங்கப்படும் நீர், மின்சாரம், தீயணைப்பு, கழிவுவகற்றல் மற்றும் துப்புரவுச் சேவைகள், நீர்ப்பாசனம் தொடர்பான அனைத்துச் சேவைகள், தொலைபேசி, தொலைத்தொடர்பு மற்றும் ஊடகத்துறை சார்ந்த அனைத்துச் சேவைகள், தாழ்நிலங்களை நிரப்புதல் மற்றும் அபிவிருத்தி செய்தல் தொடர்பான சேவைகள், விவசாயம் மற்றும் விவசாயக் காப்புறுதி சார்ந்த அனைத்துச் சேவைகள் ஆகியவை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனப்படுத்தப் பட்டுள்ளன. (ச-இ)

# பாதுகாப்பற்ற ரயில் கடவையில் ரயிலுடன் மோதுண்ட பெண் பலி!

களுத்துறை, மே 30

காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த சொகுசு ரயிலுடன் மோதுண்டு பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். சாலியபுர பகுதியில் உள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையிலேயே இந்த விபத்து நேர்ந்துள்ளது.
இவ்வாறு விபத்தில் உயிரிழந்தவர் சாலியபுர பகுதியைச் சேர்ந்த 29 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தாய் எனத் தெரியவந்துள்ளது. இந்தப் பகுதியில் ரயில் பாதை இருபுறமும் வளைவுகளைக் கொண்டுள்ளதால், ரயில் பாதையினுள் நுழையும் வரை இருபுறமும் வரும் ரயில்கள் கண்ணுக்குத் தெரிவதில்லை என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# களுத்துறையில் துப்பாக்கிச்சூடு!

## வர்த்தகர் சாவு

களுத்துறை, மே 30

களுத்துறை தெற்கு, வெட்டுவகடே பகுதியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இனந்தெரியாத நபர்களால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் வர்த்தகர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
சம்பவத்தை அடுத்து தப்பியோடிய சந்தேகநபர்களைக் கைதுசெய்ய களுத்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் மேற்பார்வையில் 3 விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், உதவிப் பொலிஸ் அத்தியட்சகருமான எப்.யு. வூட்லர் தெரிவித்துள்ளார்.
சம்பவத்தின் பின்னர் கொலையாளிகள் தப்பிச் சென்ற கார் மற்றும் சந்தேகநபர்கள் வருகைதந்ததாகச் சந்தேகிக்கப்படும் மற்றுமொரு [illegible] வெள்ளை நிற ஹைஏஸ் என்பன வெவ்வேறு இடங்களில் பொலிஸாரால் [illegible] கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# வெசாக் பண்டிகைக்கு விசேட பாதுகாப்பு!

கொழும்பு, மே 30

வெசாக் பண்டிகையை முன்னிட்டு நாடு முழுவதும் விசேட பாதுகாப்பு மற்றும் போக்குவரத்துமேலாண்மைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், உதவிப் பொலிஸ் அத்தியட்சகருமான எப்.யு. வூட்லர் தெரிவித்துள்ளார். இலங்கையின் 25 நிர்வாக மாவட்டங்களையும் உள்ளடக்கிய வகையில் பொலிஸாரினால் விசேட பாதுகாப்பு மற்றும் போக்குவரத்து ஒழுங்குமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.
வீதிகளில் அபாயகரமான அல்லது இடையூறு விளைவிக்கும் வகையில் மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கரவண்டிகள் அல்லது ஏனைய வாகனங்களைச் செலுத்துவோர் தொடர்பில் பொதுமக்கள் முறைப்பாடுகளை வழங்கமுடியும். வெசாக் வலயங்களுக்கு வருகைதரும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது. (ச-இ)

# ஆபத்தில் உதவாத அமைச்சர்!

ஆபத்து நேரத்தில நண்பனை மட்டுமில்லை, ஆரெல்லாம் ஒழுங்கா சனத்துக்காக பாடுபடுகினம் எண்டதையுமதெரிஞ்சு கொள்ளலாம். முந்தநாள் வடமாராட்சியில இருந்து கடலுக்குப் போன நாலு மீனவர்மார் இன்னும் வீடு திரும்பேலை. அவையின்ர வலையில சூடை மீன் நிறையப்பட்டதாவும், அந்தப் பாரத்தோட வரேக்க கடும் காத்து அடிச்சு அவையின்ர வள்ளம் கவிண்டிருக்கலாம் எண்டும் சொல்லுப்படுகிது. கடலில மீனவருக்கு ஒரு பிரச்சினை எண்டால் உடன மற்ற மீனவர்மார் நேவியிட்டத்தான் உதவி கேப்பினம். ஏனெண்டால் கடலில காத்தடிச்சுக்கொண்டிருக்கேக்க, மீனவர்மார் தங்கட சின்னப்படகுகளில போய்த் தேட வெளிக்கிட்டால் அந்தப் படகுகளும் கவிழுற ஆபத்து இருக்கு. ஆனால் நேவிக்காரரின்ர படகுகளில காத்து, அலை எண்டு எல்லாத்தையும் தாங்கிக் கொண்டு போற வசதியள் இருக்குது. அதால அவையள் காணாமல் போன நாலுபேரையும் மீட்கிறதுக்கு ஏதாவது செய்வினம் எண்டு அறிவிச்சிருக்கினம். ஆனால் நேவிக்காரர் கடலுக்க இறங்காமல் ரேடரில ஏதோ பாத்திட்டு 'நாங்கள் போய்ப் பார்த்தம், ஆனால் காத்தா இருக்கிறதால ஒண்டும் வடிவாத் தெரியேலை. எதுக்கும் காத்து ஓயட்டும். பிறகு போய்த் தேடுறம்' எண்டு சொல்லி அனுப்பி இருக்கினம். உண்மையில சம்பவம் நடந்த இடத்துக்கு எந்த நேவிப்படகும் வரேலை எண்டு கடலில நிண்ட மீனவர்மார் சொல்லுகினம்.

நேவி இப்பிடிக் கைவிட்டதால கடற்றொழில் அமைச்சருக்கு விசயத்தைச் சொல்லி உதவி கேப்பம் எண்டால், ஆறேழுதரம் போன் அடிச்சும் அந்தாள் ஆன்ஸர் பண்ணவே இல்லையாம். பிறகு கடற்கரைக்கு முன்னணியின்ர எம்.பி. கஜேந்திரகுமார் வந்திட்டுஅவரும் கடற்றொழில் அமைச்சருக்கு போன் பண்ணி விசயத்தைச் சொல்ல வெளிக்கிட்டிருக்கிறார். அப்பவும் அமைச்சர் போனை தூக்கேலையாம். பாவம், அமைச்சருக்கு எதும் வீடு குடிபுகுதலுக்குப் போற வேலை இருந்திருக்கும். அந்த நேரத்தில இப்பிடி போனை எடுத்து ஆய்க்கினை பண்ணினால் எப்பிடி அவர் ஆன்ஸர் பண்ணுவார்? கடைசிமட்டும் கடற்றொழில் அமைச்சர் போனைத் தூக்கவும் இல்லை, கடற்கரைக்கு எட்டிப் பாக்கவுமில்லையாம். ஆனால் பதவி மட்டும் கடற்றொழில் அமைச்சராம்.

இப்பிடி அரசாங்கத்தை நம்பிக்கொண்டிருந்தால் ஒண்டுமே நடக்காது எண்டு தெரிஞ்சு, மீனவர்மார் தங்கட சங்கத்திட்ட மண்ணெண்ணெயை வாங்கிக் கொண்டு படகுகளில போய் தாங்களே போய் கடல் முழுக்கத் தேடி இருக்கினம். ஆனால் அந்த நாலுபேரும் அம்பிடேலை. ஒரு வலையை மட்டும் கண்டெடுத்துக் கொண்டந்தவை. மீனவர்மாரைக் காணேலை எண்ட உடனேயே நேவிக்காரரும், அரசாங்கமும் நடவடிக்கை எடுத்திருந்தால் அந்த நாலு பேரையும் காப்பாத்தி இருக்கலாம் எண்டு அங்கத்தைச் சனம் சொல்லுகினம். நேவியை விட சனத்துக்கு இப்ப கடற்றொழில் அமைச்சரில தான் கடுப்பாம். அங்காலிப்பக்கம் இனிமேல் அமைச்சர் போறது கொஞ்சம் சிக்கல் தான் கண்டியளோ!

padsi@uthayan.com – பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

உ
குருவே துணை




திருமங்களஞ் சேரியில்
அருள்பாலிக்கும் ஸ்ரீராஜமாதங்கீஸ்வரி அம்மன் சன்னிதி

# அகண்ட யாகம் 30 மணித்தியாலம்

அடியார்களே !

மதங்கமா மகரிஷி ஆசிரமம் நடத்தும் மக்கள் நல யாகம் 29.05.2026 வெள்ளிக்கிழமை இரவு 8.30 மணியளவில் திருமதி ச.பரமேஸ்வரி அவர்களின் மங்கள விளக்கு ஏற்றலுடன் ஆரம்பமாகி 31.05.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் ஆலய தர்மகர்த்தா திருவாளர் கந்தையா குகணேசன் அவர்கள் மக்கள் நலம் நாட்டு நலம் வேண்டி பிராத்தனை செய்து மகா பூர்ணாகுதி வழங்கி நிறைவுபெற்றபின் தொடர்ந்து நடைபெறும் கௌரவிப்பு விழாவிலும் உரையாற்றுவார்.

**யாகத்தில் பிரதம அதிதியாக அகில இலங்கை சத்சங்க ஸ்தாபகரும் தலை-வருமான சிவத்திரு சைவமணி அவர்களும் சிறப்புரையாற்றி கௌரவிப்புக்கள் நடைபெறும்.**

யாக சித்தர் விஸ்வஸ்ரீ மாதஸ்தி சுவாமிகள் இந்த விடயம் பழமை வாய்தது முற்கால அரசர்களுக்கும் சித்தர் முனிவர்களும் இது போன்ற யாகங்கள் நடத்தியுள்ளார்கள் நாம் குரு வழி நின்று குருவிடம் தேசப்படி வருடா வருடம் அகண்ட யாகம் நடத்தி வருகிறோம். யாகத்தில் ஜாதி மதம் அரசியல் பேதம் இன்றி அனைவரும் கலந்து கொண்டு பயன்பெற ஆசீர்வதித்து வாழ்த்துகின்றோம்.

## வாழ்த்துச் செய்தி

**நாகலிங்கம் வேதநாயகன், ஆளுநர், வடக்கு மாகாணம் அவர்களின் வாழ்த்துச் செய்தி**



யாழ்மாவட்டத்தின் வரலாற்றுச் சிறப்பு மிக்க தீவகத்தில். தீவக வாழ் மக்கள் சுபீட்சமாக வாழ்வதற்கு மதங்கமா ஸ்ரீ மகரிஷி ஆச்சிரமம் நடாத்தும் "அகண்டயாகம்" சிறப்புற நடைபெறுவதற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மனமகிழ்ச்சி கொள்கின்றேன். குலதெய்வம் வண்ணை காமாட்சி அம்பாளின் ஆசியுடனும். ஆதி குரு விஸ்வஸ்ரீ வாய்க்கால் கந்தையா சித்தர் பூநாறி மரத்தடி அவர்களின் ஆசியுடனும் சற்குருபகவான் கணக்கன்பட்டி மூட்டை சுவாமிகள் ஆசியுடனும் திருமங்களஞ்சேரியில் அருள்பாலிக்கும் ஸ்ரீராஜமாதாங்கீஸ்வரி அம்பாள் சன்னதியில் 29.05.2026 வெள்ளிக்கிழமை இரவு 08:30 தொடக்கம் 31.05.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 08:30 வரை சுமார் 30 மணித்தியாலங்கள் ராசிபுரம் யாகசித்தர் விஸ்வ ஸ்ரீ கும்பம் கிருஷ்ணமங்களம் மாதங்கி சுவாமிகளினால் இந்த யாகமானது தொடங்கி இறைவனின் திருவருளால் மிகச் சிறப்பாகவும். தடையின்றியும் நிறைவடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன். இந்த யாகத்தின் மூலம் தீவக வாழ் மக்கள் நலம் பெற்று. வளம் பெருகட்டும்.

இந்த அகண்டயாகத்தினால் ஊர்காவற்துறை மக்களுக்கு மட்டுமன்றி உலக வாழ் மக்களுக்கு நன்மைகளையும். சமாதானத்தினையும். நோய் நொடியில்லா வாழ்வையும் அள்ளித்தரட்டும்! ஓம அக்கினியின் ஒளியும். வேத மந்திரங்களின் ஒலியும் தீவக வாழ் மக்களுக்கு சகல ஐஸ்வர்களையும் கொண்டு சேர்க்கட்டும். இந்த யாகத்தினை நடாத்தும் ஆலய நிர்வாகத்தினர். மதங்கமா மகரிஷி ஆச்சிரமம் மற்றும் சீடர்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு இந்த "அகண்டயாகம்" சிறப்புற நடைபெறுவதற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்தக் கொள்கின்றேன்.

## ஆசிச்செய்தி



**திருமதி ரேவதி கனகானந்தா சுவாமிகள் ராஜகிரியா**

மக்களின் துன்பங்கள் அகண்ட யாகத்தின் மூலம் நினைவு பெற்று சந்தோசமாக வாழ ராஜகிரிய காளி அம்பாளை தியானம் செய்து வாழ்த்துகின்றோம். நாட்டிற்கும், மக்களுக்கும் பூரண நின்மதி கிடைக்கும் மக்கள் ஆன்மீகத்தை மறந்து வாழ்ந்து கொண்டிருப்பதை தவிர்த்து ஆன்மீகத்துடன் வாழ பழகிக்கொள்ள வேண்டும் என ஆசீர்வதிக்கிறேன்.

## அகண்டயாக நிறைவில் கௌரவம் பெறும் அடியார்கள்


சிவத்திரு சைவ மணி அவர்கள்


வாய்க்கால் கந்தையா சித்தர்

தலைவர் திரு. சிதம்பரநாதன் காமாட்சி அம்மன் ஆலயம் கே.கே.எஸ் வீதி நாச்சிமார் கோயிலடி.
வயலின் வித்துவான் விஸ்வஸ்ரீ பத்மநாதன் சியாமகிருஷ்ண,
விஸ்வஸ்ரீ நந்தகோபால் ரூபி நகைமாளிகை, சமூக சேவையாளர்.
விஸ்வஸ்ரீ ஜீவரட்ணம் சிவப்பிரகாச ஆச்சரியார்,
விஸ்வஸ்ரீ யாதவன் ஆச்சிரம அன்னதான செயலாளர்,
விஸ்வஸ்ரீ சிவரூபன் தயாளன் ஜோதிடர் கரம்பன்
விஸ்வஸ்ரீ நடராஜா வாரகி கணபதி ஆலய தர்மகர்த்தா செல்வன் புப்புரச தோட்டம் கலகா
திருமதி காளிசித்தர் ஸ்ரீ கனகனந்த சுவாமிகள் ரேவதி
Dr. ஜாண்பி நாயகம் சென்னை தமிழ் நாடு. MBBS
விஸ்வஸ்ரீ Dr ஹரிசான் MBBS மல்லாவி. அரசினர் வைத்தியசாலை. ஆச்சிரம பிரதம செயலாளர்.
விஸ்வஸ்ரீ கௌதமன் தவாசிகன் ஞான சோதிடர் ராஜகிய காளி கோயில் ராகுஸ்தலம் குருஷேத் ஆன்மிக பாடசாலை அதிபர்

பெருமதிற்குரிய மாதங்கி சுவாமிகள் என்னிடம் தந்திரயோக கலை சத முத்திரைகளும் சார்ந்த சுவாமிகள் நாட்டிற்கும் மக்களுக்கும் ஆச்சிரமம் மூலம் செய்யும் அகண்ட யாகம் தீமை நீங்கி நன்மை உருவாகும் இலங்கையில் இவர் நடத்தும் மாதங்கி அரிசி வங்கி விடயத்தை நான் கேட்டு மிக்க மகிழ்ச்சி அடைந்தேன் மக்கள் நலமாக வாழ குருபக்தியுடன் செய்யும் யாகம் அனைத்து மதிகளுக்கும் நன்மைகிடைக்க மனதார வாழ்தி ஆசீர்வதிக்கின்றேன்.

**யாக பஸ்பம் தேவையானவர்களுக்கு வழங்கப்படும் தொடர்புகொள்ளவும்.**

**ரூபா 500/- மதங்கமாக மகரிஷி ஆச்சிரமம், க/கு இல. 012210008002 சம்பத் வங்கியில் வைப்பிட்டு முத்திரையிடப்பட்ட கவர் விலாசத்துடன் கீழ் வரும் விலாசத்திற்கு அனுப்பிவைக்கவும்.**

செயலாளர், யாக பஸ்பம்
திருமங்களஞ்சேரி மாதங்கி ஆலயம், முருகமூர்த்தி கோயிலடி,
கரம்பொன் மேற்கு, கண்ணகி அம்மன் கோயில் வீதி, ஊர்காவற்றுறை.

தொலைபேசி இல : 076 545 9560
Whatsap : 076 157 5 730
யாகச் செயலாளர்
சிவரூபன் : 077 032 2990

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



# வளைவும், நெளிவும்..!

பௌத்தமதத் தலைவர்கள் மீதான முறைப்பாடுகள் மற்றும் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்காக விசேட நீதிமன்றம் அமைக்கப்படும் என்று வாக்குறுதி வழங்கியுள்ளார் ஓர் 'இடதுசாரி' தலைவரான ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க. சமீப நாள்களாக பாலியல் குற்றச்சாட்டுகள் தொடக்கம், போதைப்பொருள் கடத்தல்கள் வரை பௌத்த தேரர்கள் தொடர்ச்சியாகப் பல வழக்குகளை எதிர்கொண்டு வருகின்றனர். பௌத்த பீடங்களின் அதிபதிகள் கூட இதற்கு விதிவிலக்கு அல்லர். இவ்வாறான நிலையிலேயே தேரர்களின் குற்றங்களை விசேட நீதிமன்றங்கள் ஊடாக விசாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், தேரர்களுக்கு என சிறப்பு ஒழுக்கக்கோவைகள் உருவாக்கப்படும் எனவும் கூறியிருக்கின்றார் ஜனாதிபதி.

இலங்கையின் ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தி ஓர் இடதுசாரிக் கட்சி. எவருக்கும் விசேட சலுகைகள் மற்றும் வரப்பிரசாதங்கள் இன்றி அனைவரும் சமமாக நடத்தப்பட வேண்டும். அதுபோல், அனைவருக்கும் அனைத்தும் சமன் என்பதே இடதுசாரிக் கட்சிகளின் அடிப்படைக் கொள்கை. ஆனால், தேரர்கள் என்று வந்துவிட்டால் நாடோ, நாட்டு மக்களோ, கட்சியோ அல்லது கட்சிக் கொள்கையோ அடுத்தகட்டம்தான் என்பதே ஜனாதிபதி அநுரவின் கருத்துகளில் இருந்து வெளிப்படும் விடயமாக அமைந்துள்ளது. குற்றங்களைப் புரியும் தேரர்களுக்கு எதற்காக சிறப்புரிமை வழங்கவேண்டும்? ஏன் அவர்களுக்காக பிரத்தியேக நீதிமன்றங்கள்? ஏன் அவர்களுக்காக விசேட ஒழுக்கக்கோவைகள்? தேரர்களுக்கு வழங்கும் இந்தச் சலுகையை ஏனைய மதத் தலைவர்களுக்கு அரசாங்கம் வழங்குமா? என்ற கேள்விகளுக்கு மிக விரைவாகப் பதில்தேட வேண்டியிருக்கின்றது.

நாட்டின் நல்லிணக்கம் மேம்பட வேண்டும் என்று தமிழர்கள் வசிக்கும் பிராந்தியத்துக்குச் சென்று பாடமெடுக்கும் ஜனாதிபதி அநுர, பௌத்த பேரினவாதத்துக்கு முறையான அங்கீகாரம் கொடுக்கும் வகையிலேயே அண்மைக் காலமாகச் செயற்பட்டு வருகின்றார். நிலக்கரி ஊழல்கள், திறைசேரி மீதான இணையத் தாக்குதல், வெளிநாட்டுக் கையிருப்பு வீழ்ச்சி மற்றும் பணவீக்கம் உள்ளிட்ட காரணங்களால் நாடு மீண்டும் மெல்லமெல்லப் பதற்றத்துக்கு உட்பட்டுவரும் நிலையில், பௌத்தமதத் தலைவர்களின் விடயத்தில் மென்போக்காக நடந்துகொள்ள வேண்டிய நிலை ஜனாதிபதிக்கு ஏற்பட்டிருக்கலாம். எது எவ்வாறு இருப்பினும், ஓர் இடதுசாரித் தலைவர் என்ற வகையில் அவர் படுதோல்வி அடைந்துள்ளார், தனது இயக்கத்தின் கொள்கையைக் காற்றில் பறக்கவிட்டுள்ளார் என்பதே அப்பட்டமான உண்மை.

இடதுசாரிகளும், கம்யூனிஸ்டுகளும் ஆளும் நாடுகள் அத்தனை நேர்த்தியாகவும் அழகாகவும் இருக்கும். ஆனால், அந்த லட்சணங்கள் எவையும் தற்போதைய அரசாங்கத்திடம் இல்லை என்பதே கசப்பான விடயம். திருடனும், நீதிபதியும் ஒருபொருளைக் கவர்ந்து சென்றால், நீதிபதிக்கே கூடுதல் தண்டனை வழங்கவேண்டும். ஏனெனில், திருடுவதால்தான் அவனுக்குத் திருடன் என்று பெயர். அதுபோல்தான் மதத் தலைவர்களின் பாலியல் குற்றங்களும், போதைப்பொருள் கடத்தல்களும் கடுமையாக அணுகப்படவேண்டும். இந்த விடயத்தில் வளைவுக்கும், நெளிவுக்கும் இடமில்லை.


செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



## பொய்யாமொழி

**ஒன்றானுந் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும்**

**பொருள்:** தீய சொற்களின் பொருளால் விளையும் தீமை ஒன்றாயினும் ஒருவனிடம் உண்டானால், அதனால் மற்ற அறங்களாலும் நன்மை விளையாமல் போகும்.




## 695 மில்லியன் டொலர் நிதியை இலங்கைக்கு விடுவிக்க ஒப்புதல்

### சர்வதேச நாணயநிதியம் நடவடிக்கை
### பொருளாதாரம் 3% வீழ்ச்சியெனவும் கணிப்பு

**கொழும்பு, மே 30**

**இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதிவசதிச் செயற்றிட்டத்தின் 5ஆம் மற்றும் 6ஆம் கட்ட மீளாய்வுகளுக்குச் சர்வதேச நாணயநிதியத்தின் இயக்குநர் சபை ஒப்புதல் அளித்துள்ளது. இதன்மூலம் இலங்கைக்கு மேலும் 695 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி விடுவிக்கப்படவுள்ளது.**

இலங்கைக்கான விரிவாக்கப்பட்ட நிதிவசதிச் செயற்றிட்டம் தொடர்பான 5ஆம் மற்றும் 6ஆம் கட்ட மதிப்பீடுகள் குறித்து வொஷிங்டனில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஐ.எம்.எப். இயக்குநர் சபைக் கூட்டத்தில் இந்த ஒப்புதல் அளிக்கப்பட்டது. விடுவிக்கப்படும் நிதியின் மூலம் பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ள மக்களைப் பாதுகாப்பதுடன் கடன் ஸ்திரத்தன்மையை மீளுறுதிப்படுத்தல், ஊழல் மோசடிகளால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைத்தல் மற்றும் பொருளாதார வளர்ச்சியை மையமாகக்கொண்ட கட்டமைப்புசார் சீர்திருத்தங்களை மேற்கொள்ளல் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்கு அவசியமான மறுசீரமைப்புக்களை முன்னெடுப்பதற்கு ஆதரவளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## செயலாளர் பதவியிலிருந்து விலகுவதற்கு கபில முடிவு!

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தனது பதவியிலிருந்து விலகுவதற்கு தீர்மானித்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவரின் அடிப்படை உரிமைகளை பேராசிரியர் கபில பெரேரா மீறியுள்ளார் என்று அண்மையில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அடுத்தே, அவர் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார் என்றும், அவர் தனது பதவி விலகல் தீர்மானத்தை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அறிவித்துள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

இதுதொடர்பான உத்தியோகபூர்வ அறிவிப்பு பொது நிர்வாக, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கும் வழங்கப்பட்டுள்ளது. நீண்டகாலமாக பொதுச்சேவையில் கடமையாற்றிய அவர், தனது பணிக்காலம் நிறைவடைந்ததை அடுத்து இந்த முடிவை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-இ)

## 'ஐஸ்' மீட்பு

கொழும்பு, மே 30

பதுரலிய, தும்பகல்ல கந்த பகுதியில் 3 கிலோ, 362 கிராம் மற்றும் 87 மில்லி கிராம் எடையுள்ள ஐஸ் போதைப்பொருள் நேற்றுக் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பதுரலிய பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலொன்றின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின்போதே ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் எவரும் கைதுசெய்யப்படவில்லை. சம்பவத்துடன் தொடர்புடையவர்களைக் கைதுசெய்யும் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

## அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணப்பணி ஆரம்பம்

கொழும்பு, மே 30

மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் ரம்புக்கனை முதல் கலகெதர வரையிலான பகுதியின் நிர்மாணப் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் இந்தப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் மூன்றாம் பகுதியின் இரண்டாம் கட்டத்தின் கீழ், 18.7 கிலோமீற்றர் தூரத்துக்கு இந்த நிர்மாணப்பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (ச-இ)

## தானசாலை பதிவுகள் நேற்றுடன் நிறைவு!

வெசாக் தினத்தை முன்னிட்டு நடத்தப்படும் தானசாலைகளை பதிவுசெய்வதற்கான கால அவகாசம் நேற்றுடன் நிறைவடைந்துள்ளது என்று இலங்கை பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் அறிவித்துள்ளது. தானசாலைகளை நடத்துவோர், தத்தமது பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஊடாக உரிய பிரதேச சுகாதார அதிகாரி அலுவலகத்தில் தங்களது தானசாலைகளைப் பதிவு செய்ய வேண்டும் என பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. பொதுமக்கள் மற்றும் தானசாலைகளில் கலந்துகொள்வோரின் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை கட்டாயமாக்கப்பட்டுள்ளது. (எ-இ)

நாளை
ஞாயிற்றுக்கிழமை- வைகாசி 17
31.05.2026
சுபநேரம் : 08.52 - 10.22
ராகுகாலம் : 04.22 - 05.52

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# காணிகளை விடுவிக்காவிடில் மீண்டும் போராட்டம் நடக்கும்

## கேப்பாப்பிலவு மக்கள் எச்சரிக்கை!

முல்லைத்தீவு, மே 30

கேப்பாப்பிலவில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை விடுவிக்காவிடில் மீண்டும் போராட்டத்தை நடத்துவோம் என்று கேப்பாப்பிலவு மக்கள் எச்சரித்துள்ளனர். காணி விடுவிப்புத் தொடர்பில், நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனால், ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட கடிதத்துக்குப் பதிலாக, அனுப்பப்பட்டுள்ள கடிதம் தொடர்பில், மக்கள் பிரதிநிகள் சிலரைத் தனது மக்கள் தொடர்பகத்துக்கு அழைத்து நாடாளுமன்ற உறுப்பினர் தெளிவுபடுத்தினார். அந்தக் கடிதத்தில் இராணுவத்தால் கையகப்படுத்தப்பட்டுள்ள கேப்பாப்பிலவு மக்களின் காணிகளை விடுவிப்பது தொடர்பில் சாதகமான பதில்கள் வழங்கப்படவில்லை. காணி உரிமையுடைய 55 பேரில் 44 பேர் மாற்றுக் காணிகளைப் பெற்றுக்கொள்வதற்கு இணங்கியுள்ளனர். அவர்களுக்கு கேப்பாபிலவு மாதிரிக் கிராமத்தில் 40 பேர்ச்சஸ் வீதமான காணிகள், வீடுகள் மற்றும் பாடசாலை வசதிகள் அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 11 பேர் மாற்றுக்காணிகள், வீடுகள் அல்லது அரசாங்க மதிப்பீட்டின் அடிப்படையில் வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு இதுவரை இணக்கம் தெரிவிக்காத காரணத்தால், முகாமுக்குச் சொந்தமான காணியின் இறுதிப் பகுதியிலிருந்து 6.75 ஏக்கர் ஒதுக்கப்பட்டு, இராணுவத்தின் தொழிலாளர் பங்களிப்புடன் வீடுகளை அமைத்துக் கொடுக்க முன்மொழியப்பட்டுள்ளது. இந்த நிலப்பரப்பில் தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டடங்களின் பெறுமதி 538 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக இருப்பதால், முகாமை இடமாற்றம் செய்வது அதிக செலவை ஏற்படுத்தும். இந்தக் காணியானது நந்திக்கடல் களப்புச் சார்ந்த பிரதேசத்தில் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், இராணுவத் தொடர்பாடல் முறைமைகளைப் பேணிச்செல்வதற்கும் மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்தது என்பதால், அதனைத் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்வது அத்தியாவசியமானது என்று இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்குப் பதிலளித்த மக்கள் பிரதிநிதிகள், மாற்றுக் காணிகளைப் பெறுவதற்கு எவரும் இணக்கம் தெரிவிக்கவில்லை. எனவே 55 பேருடைய காணிகளும் விடுவிக்கப்பட வேண்டும். அடுத்த வாரம் நடைபெறவுள்ள முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட வேண்டும். இல்லையென்றால் மீண்டும் போராட்டத்தை நடத்தநேரிடும் என்று பிரதிநிதிகள் இதன்போது தெரிவித்தனர். (க-246)

## நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், மே 30

வீரகத்தி தனபாலசிங்கத்தின் 'பத்திரிகைத்துறையில் என் கதை' எனும் நூல் அறிமுக விழா எதிர்வரும் முதலாம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட கருத்தரங்கு மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. யாழ். பல்கலைக்கழக ஊடகத்துறைப் பேராசிரியர் சி.ரகுராம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் சி.சற்குணராசா கலந்துகொள்வார். நிகழ்வில் 'பத்திரிகைத்துறையில் இவர் கதை ஏன் சொல்லப்பட வேண்டும்' என்ற தலைப்பிலான கருத்துரைகளை, சுதந்திர ஊடகவியலாளர் கணபதி சர்வானந்தா, சமூக அரசியல் ஆய்வாளர் தெ.மதுசூதனன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (க)

## பச்சிலைப்பள்ளியின் 3 கிராமங்களில் கிராமிய வேலைத்திட்டங்கள் ஆரம்பம்

பளை, மே 30

'ஆயிரம் கிராமங்களில் ஆயிரம் வேலைகள்' தொடர்பான வேலைத்திட்டம், பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தின் 3 கிராம அலுவலர் பிரிவுகளில் எதிர்வரும் ஜூன் மாதம் 2ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான ஆரம்ப நிகழ்வுகளாக தர்மக்கேணி - கிராம அலுவலர் பிரிவில், பாகற்காய் உற்பத்தியாளர்களை ஊக்குவித்தல், மாசார் - கிராம அலுவலர் பிரிவில் மல்லிகைப்பூ உற்பத்தியாளர்களை ஊக்குவித்தல், முகாவில் - கிராம அலுவலர் பிரிவில் நெற்தளத்துக்கான அடிக்கல் நடல் போன்ற நிகழ்வுகள் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-9)

## வைகாசி விசாக உற்சவம்

யாழ்ப்பாணம், மே 30

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் வைகாசி விசாக உற்சவம் இன்று சனிக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெறவுள்ளது. காலை 7.30 மணியளவில் சண்முக திரவ்ய மகா அபிஷேகம் ஆரம்பமாகும். தொடர்ந்து முற்பகல்10.30 மணியளவில் சண்முக நியாஸம், சகஸ்ர நாம அர்ச்சனை என்பன இடம்பெறும்.


நாளைமறுதினம் மாலை 4.45 மணியளவில் வசந்தமண்டபப் பூஜையைத் தொடர்ந்து முருகப்பெருமான் வள்ளி தெய்வயானை சமேதரராக வீதி உலாவரும் திருக்காட்சியும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-66)

## போதைப்பொருள் பாவனைக்கெதிராக சங்கானையில் கவனவீர்ப்பு

யாழ்ப்பாணம், மே 30

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் , போதைப் பொருள் மற்றும் புகையிலைக்கு எதிரான, கவனவீர்ப்புப் போராட்டமும், விழிப்புணர்வும் சங்கானையில் நேற்று இடம்பெற்றன.

போதை மற்றும் புகையிலை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக, சங்கானை சந்தைக் கடைகளின் வர்த்தகர்கள் மற்றும் பொதுமக்களுக்குத் துண்டுப்பிரசுரங்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து சங்கானை பேருந்து நிலையத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. போதை மற்றும் புகையிலைக்கு எதிரான பதாகைகளை ஏந்தி, கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து விழிப்புணர்வுக் கருத்துப் பகிர்வு இடம்பெற்றது. இதில் சங்கானை பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையினர், வலிகாமம் மேற்குப் பிரதேச சபையினர், சமூகமட்ட அமைப்பினர், வர்த்தகர்கள் மற்றும் போதைக்கு எதிரானோர் கலந்து கொண்டனர். (க-27)



# இன்றைய ராசி உங்களுக்கு எப்படி?

**மேடம்:** முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்பட்டு நீங்கும். உறவினர்கள்வகையில் தேவையற்ற பிரச்சினை ஏற்படக்கூடும் என்பதால் பொறுமை அவசியம்.

**இடபம்:** மனதில் தன்னம்பிக்கையும் தைரியமும் அதிகரிக்கும். தேவையான பணம் கிடைக்கும். உறவினர்கள் சிலர் உங்கள் யோசனை கேட்டு வருவார்கள். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தருவதாக இருப்பதுடன், ஆதாயம் தருவதாகவும் அமையும்.

**மிதுனம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால், குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எதையும் எடுக்கவேண்டாம். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள். அனுசரித்துச் செல்வது நல்லது. சிலருக்கு வெளியூர்ப்பயணம் மேற்கொள்ள நேரிடும்.

**கடகம்:** சகோதரவகையில் எதிர்பார்த்த காரியம் சாதகமாகமுடியும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படக்கூடும். கணவன் – மனைவிக்கிடையே சிறுசிறு விவாதங்கள் ஏற்படும். பொறுமை அவசியம்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். குடும்பத்தில் சிறுசிறு சலசலப்பு ஏற்பட்டாலும், சமயோசிதமாக சமாளித்து விடுவீர்கள். தேவையான பணம் கையில் இருந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**கன்னி:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். தொடங்கும் காரியம் அனுகூலமாகமுடியும். உற்சாகமாகச் செயற்படுவீர்கள். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**துலாம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது சாதகமாகமுடியும். எதிரிகளால் மறைமுக ஆதாயம் உண்டாகும். அரசாங்கக் காரியம் அனுகூலமாகமுடியும்.

**விருச்சிகம்:** காலையில் வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவைப்படும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும். பிற்பகலுக்குமேல் புதிய முயற்சிகள் சாதகமாக முடியும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**மகரம்:** எதிர்பார்த்த பணம் கைக்குக் கிடைக்கும். வீட்டில் உள்ளவர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுச் செயற்படுவார்கள்.

**கும்பம்:** உற்சாகமான நாள். ஆனால், வெளியூர்ப்பயணம் மேற்கொள்வதைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்குப் புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு ஏற்படக்கூடும்.

**மீனம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் முடிவதில் தடைகளும் தாமதமும் ஏற்படக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# புகைத்தல் எதிர்ப்பு தினம்

யாழ்ப்பாணம்,மே 30

கனகலிங்கம் செல்வராஜா ஞாபகார்த்தமாக நடாத்தப்படும் சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினம் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு, கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலையில் இடம்பெறவுள்ளது.

முதலி இளைஞர் கழகத் தலைவர் சி. கோகுலன் தலைமையில் இடம்பெறும் நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு அதிகாரி மருத்துவர் நா. சிவபாலன், சிறப்பு விருந்தினர்களாக கொக்குவில் ஸ்ரீ ஞானபண்டித வித்தியாசாலை அதிபர் த. மனோகரன், கொக்குவில் ஸ்தான சி.சி.த.க பாடசாலை அதிபர் ஜெ. நிலாஷன், கொக்குவில் மேற்கு சி.சி.த.க பாடசாலை அதிபர் செல்வி. ப. சுபந்தினி ஆகியோர் கலந்து கொள்வர். (க)

# பௌத்த துறவிகளுக்கு சீர்திருத்தம் அவசியம்

## சந்திரிகா தெரிவிப்பு

கொழும்பு, மே 30

பௌத்த சாசனத்தின் நீண்டகால இருப்பு என்பது தர்மம் மற்றும் ஒழுக்கக் கட்டுப்பாடு ஆகிய இரண்டையும் பாதுகாப்பதிலேயே தங்கியுள்ளது. பௌத்த துறவிகள் அமைப்புக்குள் விரிவான சீர்திருத்த வேலைத்திட்டம் அவசியம் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

பௌத்த பீடங்களினது மகாநாயக்க தேரர்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். பௌத்த சாசனத்தைப் பாதிக்கும் ஆழமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, தனித்தனியான சம்பவங்களில் மட்டும் கவனம் செலுத்துவதோ அல்லது அவை தொடர்பான பொதுமக்களின் விவாதங்களை முடக்க முயற்சிப்பதோ தீர்வாகாது. பௌத்த சாசனத்தின் எதிர்கால ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்ட பௌத்த மாநாடு ஒன்றை ஆரம்பிப்பதில் மகாநாயக்க தேரர்கள் தலைமைத்துவத்தை ஏற்கவேண்டும். சிரேஷ்ட பௌத்த தலைவர்கள் குழுவொன்றுடன் இணைந்து பணியாற்றத் நான் தயாராக இருக்கின்றேன் என்றும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# Invitation for Bids (IFB)
# MUNICIPAL COUNCIL, VAVUNIYA

1. The Chairman, Regional Procurement Committee (RPC), on behalf of Commissioner, Municipal Council, Vavuniya now invites sealed bids from eligible and qualified bidders for the works listed in the table below.

| S. No | Bid No. | Name of the Work | Estimated Civil Cost (LKR in Mn) | | CIDA Grade Required | Required Bid Security: Amount (Rs.) | Required Bid Security: Validity Period | Contract Period (Days) |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | NP/14/43(2)/06/WD /PSDG.St/27/2026 | Asphalt work in Katkuli Road | | 3.95 | C9 & Above (Highway Construction) | 40,000.00 | 2026-08-31 | 91.0 |
| 2 | NP/14/43(2)/06/WD /Dithwa/28/2026 | Improvement of Thirunavatkulam Sivan kovil Road | | 13.38 | C9 & Above (Highway Construction) | 134,000.00 | 2026-08-31 | 91.0 |
| 3 | NP/14/43(2)/06/WD /Dithwa/29/2026 | Reconstruction od FSD Lane | | 3.01 | C9 & Above (Highway Construction) | 31,000.00 | 2026-08-31 | 91.0 |
| 4 | NP/14/43(2)/06/WD /Dithwa/30/2026 | Asphalt work in Thachchanathankulam Road | | 2.90 | C9 & Above (Highway Construction) | 30,000.00 | 2026-08-31 | 91.0 |
| 5 | NP/14/43(2)/06/WD /CF/31/2026 | Improvement of Drainage at Vairavapuliyankulam Internal Roads | | 2.49 | C9 & Above (Highway Construction) | 25,000.00 | 2026-08-31 | 91.0 |
| 6 | NP/14/43(2)/06/WD /CF/32/2026 | Ashpalt Work in Katkuli Road (Stage 2) | | 2.08 | C9 & Above (Highway Construction) | 21,000.00 | 2026-08-31 | 91.0 |
| 7 | NP/14/43(2)/06/WD /CF/33/2026 | Improvement of Kovilkulam Alady Road<br>Improvement of Kovilputhukkulam 5th Lane | 0.83<br>1.24 | 2.06 | C9 & Above (Highway Construction) | 21,000.00 | 2026-08-31 | 91.0 |
| 8 | NP/14/43(2)/06/WD /CF/34/2026 | Improvement to Veppankulam 60 Acre 1st Lane<br>Renovation work of Pathiniyarmahilankulam 1st Lane | 1.24<br>0.83 | 2.07 | C9 & Above (Highway Construction) | 21,000.00 | 2026-08-31 | 91.0 |
| 9 | NP/14/43(2)/06/WD /CF/35/2026 | Renovation work at Annaithiresa Road<br>Improvement of Velikkulam 3rd & 5th Lane Connecting Lane | 0.83<br>1.23 | 2.06 | C9 & Above (Highway Construction) | 21,000.00 | 2026-08-31 | 91.0 |
| 10 | NP/14/43(2)/06/WD /CF/36/2026 | Repair work of Periyarkulam 4th Lane<br>Improvements of Globe Mill Road<br>Repair work at Pandarikulam 1st Lane | 0.83<br>0.83<br>0.83 | 2.49 | C9 & Above (Highway Construction) | 25,000.00 | 2026-08-31 | 91.0 |
| 11 | NP/14/43(2)/06/WD /CF/37/2026 | Municipal Council Old Quarters Repair (Q 1,2,3,5,5A) & Kandy Road 11th Quarters at UC Road | | 0.75 | C9 & Above (Building Construction) | 8,000.00 | 2026-08-31 | 91.0 |

1. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) Procedure.
2. Interested eligible bidders may obtain further information from Commissioner, Municipal Council, Vavuniya (T.P:024-222 2275/ 024 222 8066 email: ucvavuniya@yahoo.com) from 09.00 Hrs to 14.30 Hrs and inspect the bidding documents at the address Commissioner, Municipal Council, Vavuniya.
3. Qualification requirements to qualify for contract award is given in "Section 4 of the Qualification Information and Section 5 of the Schedule / Bidding Data" of the Procurement Document.
4. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written request to the address Commissioner, Municipal Council, Vavuniya from 01.06.2026 until 14.06.2025 from 09.00 Hrs to 14.30 Hrs. Upon payment of a non-refundable fee of Three Thousand Rupees (Rs.3,000.00). The method of payment will be by cash.
5. Bids must be delivered to the address Chairman, Regional Procurement Committee, Municipal Council, Vavuniya on or before 15th June 2026 and 10.30 Hrs. Late bids shall be rejected. Bids will be opened in the presence of Bidders' representatives who choose to attend in person or vital at the address same above.
6. All bids must be accompanied by a Bid-Security of an amount and validity date mentioned in the table above.
7. The pre-bid meeting will be held on 05.06.2026 at 10.30 Hrs at the Municipal Council, Vavuniya.
8. The address (es) referred to above is (are):

Chairman
Regional Procurement Committee,
Municipal Council,
Vavuniya.

30.05.2026

**மில் தளபாடங்கள் தேவை**

நெல், தானியங்கள், தேங்காய், கொப்பறா மில் தளபாடங்கள் மொத்தமாக கொள்வனவு செய்யப்படும்.

தொடர்பு: 077 772 2215

**வீடு வாடகைக்கு**


திருநெல்வேலி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள 4 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உள்ளது. அமைதியான சூழல், விசாலமான இடம் மற்றும் உடனடி பயன்பாட்டிற்கு தயார். குடும்பம் அல்லது அலுவலக பயன்பாட்டிற்கு மிகவும் ஏற்ற இடம்.

வாடகை ரூ.75,000/-

(CS 61540) (N-1)

தொடர்பு: +44 7341 572187 (whatsapp)

# மரண அறிவித்தல்



## சதாசிவம் பாஸ்கரன்

பிறப்பு 25.08.1967 — இறப்பு 29.05.2026

அரியாலை ஈச்சங்காட்டைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் பாஸ்கரன் அவர்கள் 29.05.2026 வெள்ளிக்கிழமை இயற்கை எய்தினார்

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் (Post Office கிளி) - கமலாம்பாள் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான புண்ணியசிங்கம் - குணவதி தம்பதியரின் மருமகனும், சித்திராதினியின் அன்புக் கணவரும், லிலோத்தன் அவர்களின் அன்புத் தந்தையும் ஆவார்.

**அன்னாரின் இறுதிக்கிரியைகள் பின்னர் அறிவிக்கப்படும்.**

தகவல்:
குடும்பத்தினர்

மனைவி - சித்திராதினி - +447 448 180 219
மகன் - லிலோத்தன் - +447 917 294 009

CS61537 N-4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மாகாணசபைத் தேர்தல் தாமதத்தினால் அதிகாரப்பகிர்வுக் கட்டமைப்பு சீர்குலைவு!

## மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் கண்டனம்

மாகாணசபைகளுக்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் நீண்டகாலமாக இல்லாதிருப்பது, நாட்டின் அதிகாரப் பகிர்வு நிர்வாகக் கட்டமைப்பை முற்றாகப் பாதித்துள்ளதுடன், மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பறித்துள்ளது என்று மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் கண்டனம் தெரிவித்துள்ளது. இதுதொடர்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மாகாணசபைத் தேர்தல் விவகாரம் குறித்து, அரசாங்கத்தின் முறையான கட்டமைப்புக்கு அப்பாற்பட்டு ஆளுங்கட்சியின் அதிகாரி ஒருவர் உத்தியோகபூர்வ அறிவிப்பை வெளியிட்டமை நாட்டின் வெளிப்படைத்தன்மை மற்றும் ஜனநாயக ஆட்சி நிர்வாகம் குறித்து கேள்விகளை எழுப்பியுள்ளது. நாட்டின் இறையாண்மை மற்றும் நிறைவேற்றதிகாரம் உண்மையில் அரசியலமைப்பின்படி மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி மற்றும் அமைச்சரவையிடம் உள்ளதா? அல்லது கட்சித் தலைமையகத்திடம் நிலைகொண்டுள்ளதா? என்ற பலத்த சந்தேகத்தை இது மக்கள் மத்தியில் தோற்றுவித்துள்ளது. இலங்கையில் ஆட்சிப் பீடமேறிய அனைத்து அரசாங்கங்களும் தங்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் ஊடாக மாகாண சபைத் தேர்தலை நடத்துவதாக உறுதியளித்தும், அதனை நிறைவேற்றத் தவறியுள்ளது. மாகாணசபைத் தேர்தலை நடத்துவதில் சில சட்டச் சவால்கள் காணப்படுகின்ற போதிலும், கடந்த கால ஆட்சியாளர்களைப் போலவே தற்போதைய அரசாங்கமும் அந்தச் சிக்கல்களைத் தீர்க்க முனையாமல், தேர்தலைத் தாமதப்படுத்துவதற்கான ஒரு தற்காப்பு நியாயப்பாடாகவே அதனைப் பயன்படுத்தி வருகிறது. இது நாடாளுமன்றத்தினூடாக உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய ஒரு எளிய விடயமா கும். மாகாணசபைத் தேர்தல்களைத் தாமதமின்றி மிக விரைவில் நடத்துவதற்கான வாக்குறுதியை அரசாங்கம் நாட்டு மக்களுக்கு மீண்டும் உறுதிப்படுத்தல் வேண்டும்- என்றுள்ளது.

(ச-இ)


## வேலைவாய்ப்பு

யாழில் இயங்கிவரும் பல சரக்கு கடை மற்றும் சுப்பர் மார்க்கட்கு கீழ்காணும் ஆட்கள் தேவை.

- Manager (2 வருட அனுபவம்)
- Administtration
- Computer Billing + Cashier
- Sale Assistants (Boy + Girl)
- Part Time (5.00pm to 10.00pm

யாழ் மாநகர சபைக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:-
077 230 6737, 077 419 5015

(CS/61544) J-1



## ஏழாம் ஆண்டு நினைவுருகல்

அமரர் திருமதி சறோஜினிதேவி கோபாலபிள்ளை



திதி: வைகாசி திங்கள் பூர்வ பக்க சதுர்த்தி
(30.05.2026)

எமது குடும்பத்தின் கருவூலமே அம்மா
யாவர்க்கும் இனியவராய் என்றென்றும்
இதய ஒளி பரப்பி வாழ்ந்த அன்புத் தெய்வமே
இந்த மண்ணில் உங்களைப் போல்
இனி யாரை நாங்கள் காண்போம் அம்மா

அம்மாவின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல (யாழ் அரசடி, பண்டாரகுளம்) பிள்ளையாரையும், நயினை நாகபூசணி அம்மனையும், நல்லூரனையும் பிரார்த்திக்கின்றோம்.

பிறப்பு 14.11.1948
இறப்பு 15.06.2019

2/1, மூர்த்தவிநாயகர் வீதி,
கடுக்காயடிலேன்,
நல்லூர், யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(cs 61525 N-1



## வீட்டுடன் காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நுணாவில் மத்தி வேலாயுதம் வீதியில் வீட்டுடன் 2 1/2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
071 540 3175, 072 784 1524

(CR/47617) J-1



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 25 . 02 . 1968



மறைவு 11 . 06 . 2025

அமரர் திருமதி சியாமளா ஸ்ரீதரசர்மா

திதி: வைகாசி பூரணை

அம்மா....
உன் மடியில்தான் எங்கள் உலகம் மலர்ந்தது.
உன் சிரிப்பில்தான் வீடு முழுதும் ஒளிந்தது.
காலை தேநீரின் வாசத்திலும் நீ இருக்கிறாய்.
கதவோரம் காத்திருந்த பார்வையிலும் நீ இருக்கிறாய்.
ஒரு வருடம் கடந்தாலும் இதயம் ஏற்கவில்லை.
உன் பிரிவின் வெற்றிடத்தை காலமும் நிரப்பவில்லை.
"சாப்பிட்டாயா?" என்ற உன் வார்த்தை கேட்காத வீடு.
இன்று அமைதியாய் நின்று கண்ணீரை பேசுகிறது.
உன் கைகள் தழுவாத நாட்கள் குளிராய் போகின்றன.
உன் ஆசிகள் மட்டும் எங்களை உயிராய் தாங்குகின்றன.
நினைவுகளில் தினமும் உன்னைத் தேடும் பிள்ளைகள் நாம்.
நிழலாய் பின்னால் நடக்கும் உன் அன்பை உணர்கிறோம்.
அம்மா.....
நீ இல்லை என்றாலும்,
எங்கள் இதயத் துடிப்பில் என்றும் உயிராய் வாழ்கிறாய்
உங்களின் ஆத்மா நடராஜராமலிங்கப் பெருமானின்
பாதார விந்தங்களில் சரணாகதி அடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

பருத்தித்துறை வீதி,
ஆவரங்கால் மேற்கு, புத்தூர்.

(cs.61543) (N-1)

குடும்பத்தினர்






## மு/வித்தியானந்த கல்லூரி

(தேசிய பாடசாலை)

முள்ளியவளை

## பவள விழா நிகழ்வுகள்

| | | |
|---|---|---|
| பவள விழா நடைபவனி | 03.06.2026 | புதன்கிழமை காலை 6.30 |
| பவளவிழா 1ம் நாள் நிகழ்வு | 05.06.2026 | வெள்ளிக்கிழமை |
| (காலை அமர்வு : மு.ப 8.00 மணி, மாலை அமர்வு : பி.ப. 2.00 மணி) | | |
| பவளவிழா 2ம் நாள் நிகழ்வு | 06.06.2026 | சனிக்கிழமை |
| (காலை அமர்வு : மு.ப 8.30 மணி, மாலை அமர்வு : பி.ப. 3.30 மணி ) | | |

அனைவரையும் அன்புடனும் உரிமையுடனும்

## அழைக்கின்றோம்

கல்லூரிச் சமூகம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# 40 மாணவர்களுக்கு புத்தகப்பை வழங்கல்

முல்லைத்தீவு, மே 30

துணுக்காய் கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஒட்டுசுட்டான் கருவேலன் கண்டல் அ.த.க. பாடசாலையில் கல்விகற்றுவரும் 40 மாணவர்களுக்கு, தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர் இராஜசேகரம் (அவுஸ்ரேலியா) தனது பெற்றோர் நினைவாக புத்தகப்பைகளை வழங்கியுள்ளார்.

பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், தேசிய மக்கள் சக்தியின் மாவட்ட அமைப்பாளர், மாவட்டச் செயற்பாட்டாளர்கள், ஒட்டுசுட்டான் பிரதேச இணைப்பாளர், புதுக்குடியிருப்புப் பிரதேச சபையின் உறுப்பினர் மற்றும் கட்சியின் ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர். இந்தப் புத்தகப்பைகள் அவுஸ்ரேலியாவில் இருந்து கொண்டுவரப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. (க-19)



கொழும்புத்துறை மேற்கு வதிரி பீட விநாயகர் ஆலயத்தின் திருமஞசத் திருவிழா கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்றது. (க-17)



மண்கும்பான் பிள்ளையார் ஆலயத்தின் தீர்த்தக்கேணி பல இலட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது. இதற்கான ஆரம்பப் பணிகள், சமயக்கிரியைகளுடன் கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டன. (க-17)

# விதையனைத்தும் விருட்சத்தால் 6 மாணவர்களுக்கு சப்பாத்துக்கள்

யாழ்ப்பாணம், மே 30

விதையனைத்தும் விருட்சத்தால், வலிகாமம் வலயத்தின் தடகளப்போட்டிகளில் வெற்றிபெற்று மாகாணப் போட்டிகளுக்குத் தகுதி பெற்றுள்ள தேவையுடைய மாணவர்கள் 6 பேருக்கு சப்பாத்துகள் வழங்கப்பட்டன.

இதற்கான நிதியை அமெரிக்கா நியூயோர்க்கில் அமைந்துள்ள ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி ஆலயத்தின் பீட சீடர்கள் வழங்கியுள்ளனர். வன்னிப் பட்டறை உதவிக்கரத்தின் சைதன்ய சேவை ஊடாக மாணவர்களுக்குச் சப்பாத்துகள் வழங்கப்பட்டன. (க)





6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண் மகிழ 12 . 10 . 1944

மனம் நெகிழ 30 . 05 . 2020



அமரர் நடராஜா சுரேந்திரன்
(மொழிபெயர்ப்பாளர் - கிளார்க்கர்)

ஆண்டுகள் ஆறு சென்றாலும்
அகலவில்லை எங்கள் துயரம்
மனம் உங்களைத் தேடுகிறது
நினைவுகள் ரணங்களாய்க் கொல்கின்றன
குடும்பத்தின் ஒளிவிளக்காய்
அனைவருடனும் கலகலப்பாகப்பேசி
மகிழ்விக்கும் உங்கள் சிரித்தமுகம்
கண்களில் தொடர்ச்சியாகத்
தோன்றிய வண்ணம் இருக்கின்றது
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

47, பழைய யாழ் வீதி,
சிறாம்பியடி, யாழ்ப்பாணம்.
சு.புஸ்பராணி - 076 663 5996
விவேகரமணன் - +3362 403 9679
வித்தியாரமணன் - 4474 9518 6321
விஜயகாயத்திரி


மனைவி, மக்கள்,
பேரர், பெறாமக்கள்

(CS/615411) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



அளவெட்டி கும்பளாவளை பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவ எட்டாம் திரு விழாவில் அள வெட்டி தவில் வித்துவான் தெட்சணா மூர்த்தி உதய சங்கர் நாதபிர மம்மனும்பட்டம் வழங்கி கௌர விக்கப்பட்டார். (ச-63)




## சந்நிதியான் ஆச்சிரமத்தால் சீருடைகள் வழங்கிவைப்பு

வவுனியா, மே 30

சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகத்தினரால் 180, 500 ரூபா பெறுமதியான புதிய சீருடைகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை வவுனியா கல்மடு சரஸ்வதி அறநெறிப்பாடசாலையைச் சேர்ந்த 42 மாணவர்களுக்கும், வவுனியா பூம் புகார் முத்துமாரியம்மன் அறநெறிப்பாடசா லையைச் சேர்ந்த 72 மாணவர்களுக்கும் வழங்கப்பட்டன.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகன தாஸ் சுவாமிகள் ஆச்சிரமத் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று புதிய சீருடைகளை வழங்கி வைத்தார். (எ-41-66)

## உத்தியோகத்தர் மதிப்பளிப்பு

'சமூக ஒற்றுமைக்கான பொறுப்பான டிஜிற்றல் சமூகம்' எனும் தொனிப்பொருளின்கீழ், வடமாகாண இளையோர் மற்றும் சிறுவர் பங்கேற்புக்கான விசேட மதிப்பளிப்பு, சாவகச்சேரி நகரசபை மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன், சொண்ட் நிறுவனத்தால் ஏற்பாடுசெய்யப்பட்ட நிகழ்வில், செயற்றிட்ட உத்தியோகத்தர்கள் மற்றும் பயிற்சி வழங்குநர்கள் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன், வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், சொண்ட் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ச.செந்துராசா, யுனிசெப் நிறுவனத்தின் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் திருமதி சர்மிலி சதீஸ் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். (க-66)





### வேலையாட்கள் தேவை

கனகராயன்குளத்தில் தோட்டம் பராமரிப்பதற்கு வேலையாட்கள் தேவை.
* தங்குமிட வசதி செய்து தரப்படும்.
* அனுபவமுள்ளவர்கள் விரும்பத் தக்கது.
* மாதாந்தம் 60000 ரூபா வழங்கப் படும்.

தொடர்பு: 077 6235 884

(CS 31894) A

## யாழ்.போதனா மருத்துவமனைக்கு புதிய எக்கோ இயந்திரம் அன்பளிப்பு!

யாழ்ப்பாணம், மே 30

யாழ். போதனா மருத்துவமனையின் இருதய சிகிச்சைப் பிரிவுக்கு புதிய எக்கோ இயந்திரம் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

16 மில்லியன் ரூபா பெறுமதியான இந்த இயந்திரம், அவுஸ்ரேலியாவிலுள்ள எமரல் காடியாக் என்ற நிறுவனத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் மருத்துவமனைக்கு வருகைதரும் ஆயிரக்கணக்கான இதய நோய் சார்ந்தவர்களுக்கான சிகிச்சையை இலகுவாக வழங்கமுடியும். அத்துடன் இருதயத்தின் செயற்பாடுகளை மிகத் துல்லியமாக அறிந்து கொள்ளமுடியும் என்று யாழ். போதனா மருத்துமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். (க-29)


### 31ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

மலர்வு 02 . 12 . 1946



உதிர்வு 30 . 04 . 2026

**அமரர் கனகசபை பஞ்சரத்தினம்**

நாட்கள் பல கடந்து மாதம் ஒன்று ஆனாலும்,
உங்கள் பாச நினைவுகள் எங்கள் நெஞ்சில் என்றும் அழியாமல் வாழும்!
நீண்டு செல்லும் நாட்கள் யாவும் உங்கள் நினைவுகளை சுமந்த வண்ணம்,
தொடர்ந்து பயணிப்போம் நாம்!
உங்களின் ஆத்மா சாந்தி அடைய,
எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றோம்!

அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (30.05.2026) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்திலும் அதனைத் தொடர்ந்து நண்பகல் 12.00 மணியளவில் மதிய போசன நிகழ்வானது நீராவியடியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் மண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள், அன்னாரின் நினைவாக நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

172, [illegible] வீதி,
[illegible].

குடும்பத்தினர்

(CS/31892) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## தமிழ்...

புதிய அரசியலமைப்பு உருவாக்கப் பணிகள் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

30 வருடகால யுத்தம் முடிவடைந்தாலும் அதனால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு இன்றளவில் தீர்வு கிடைக்கவில்லை. இதனால் தான் வடக்கு மற்றும் கிழக்கு மக்கள் இன்றும் போராட்டங்களில் ஈடுபடுகிறார்கள். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் படையினரின் பிடியிலுள்ள காணிகள் படிப்படியாக விடுவிக்கப்படும். நாட்டின் தேசியப் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும். ஜனாதிபதி அநுரகுமார ஆட்சிக்கு வந்து ஒன்றரை வருட காலத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பல ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டுள்ளன. இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டு வீதிகள் திறக்கப்பட்டுள்ளன.

மக்களின் காணிகளை மக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உறுதியாகவுள்ளோம். தேசிய பாதுகாப்புக் காரணமாக சில காணிகளை விடுவிக்க முடியாத நிலைமை ஏற்படலாம். அவ்வாறான நிலை நேர்ந்தால், அந்தக் காணிகளுக்குப் பதிலாக மாற்றுக் காணிகள் அல்லது இழப்பீடு வழங்கப்படும். அதற்குரிய நடவடிக்கைகள் உரிய அமைச்சுகள் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றன.

மலையக மக்களின் அடிப்படைப் பிரச்சினை குறித்து தீவிர கரிசனை கொண்டுள்ளோம். சம்பள அதிகரிப்பின் ஊடாக மாத்திரம் அந்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த முடியாது. வீடு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அந்த மக்களுக்கு வழங்க விசேட பொறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. தற்போதைய அரசியலமைப்பு தொடர்பில் நல்ல தொரு அபிப்பிராயம் மக்கள் மத்தியில் கிடையாது. நாட்டுக்கு பொருத்தமான வகையில் புதிய அரசியலமைப்பை உருவாக்குவோம். எமது வாக்குறுதியை நாங்கள் கைவிடமாட்டோம் -என்றார். (அ-ம-இ)

## அவதூறு...

பலாங்கொட கஸ்ஸப்ப தேரருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று முன்வைக்கப்பட்ட விண்ணப்பத்தை சாவகச்சேரி நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

நாவற்குழி விகாரைக்குக் குடிதண்ணீர் எடுக்கச்சென்ற சிறுமிமீது பாலியல் துஷ்பிரயோக முயற்சி மேற்கொண்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் தேரரொருவர் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார்.

இந்தக் கைது நடவடிக்கைக்கு எதிராக பலாங்கொட கஸ்ஸப்ப தேரர் கொழும்பில் ஊடக சந்திப்பை நடத்தி கருத்துத் தெரிவித்திருந்தார்.

இதையடுத்து, பலாங்கொட கஸ்ஸப தேரருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு விசாரணை முன்னெடுக்கப்படவேண்டும் என சாவகச்சேரி சட்டத்தரணிகள் குழுவின் சார்பாக ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலையாகி நீண்ட சமர்ப்பணமொன்றை அண்மையில் மேற்கொண்டார். இந்தச் சமர்ப்பணம் தொடர்பில் நீதிமன்றத்தின் முடிவும் தீர்மானமும் நேற்று அறிவிக்கப்பட்டது. இதன்போதே, பலாங்கொட கஸ்ஸபதேரருக்கு எதிராக நீதிமன்ற அவமதிப்பு வழக்குத் தொடர்வதற்குத் தேவைப்பாடுகள் இல்லை என்று நீதிமன்றம் தனது தீர்ப்பில் சுட்டிக்காட்டியுள்ளது. (அ-ம-26)

## எதிர்க்...

யான ஐக்கிய மக்கள் சக்தி நிராகரித்துள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதம நிறைவேற்று அதிகாரியான அஜித் பி பெரேரா தெரிவித்ததாவது:-

நிதியமைச்சு பதவியைப் பெறுவதற்காக திசைகாட்டி அரசாங்கத்தில் ஹர்ஷ டி சில்வா இணையவுள்ளார் என்று சில தகவல்கள் வெளிவருகின்றன. அந்தத் தகவல்கள் உண்மையில்லை. நிதியமைச்சைப் பொறுப்பேற்குமாறு ஹர்ஷ டி சில்வாவுக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. அவ்வாறு அழைப்பு விடுக்கப்பட்டாலும் அதை ஏற்கும் நிலைப்பாட்டில் அவர் இல்லை. ரணில் விக்கிரமசிங்க அழைத்தபோதுகூட மக்கள் ஆணைக்கு புறம்பாக ஹர்ஷ டி சில்வா செயற்படவில்லை. அதே வேளை, எரான் விக்கிரமரத்ன கிரிக்கெட் சபையில் பதவியேற்றதை எமது கட்சி அங்கீகரிக்கவில்லை. கட்சியில் வகித்த பதவிகளை அவர் துறந்திருந்தாலும், கட்சி உறுப்புரிமையில் இருந்து விலகவில்லை - என்றார். (அ-ம-இ)

## அரச...

ஒழுங்கு தொடர்பில் ராஜபக்சக்கள் கதைக்கின்றனர். ஆனால் பசில் நீதிமன்றத்தில் முன்னிலையாகாமல் வெளிநாட்டில் இருப்பது ஏன்?' என நாமலிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு நாமல் ராஜபக்ச தெரிவித்ததாவது:-

பசில் ராஜபக்ச சட்டத்தைப் புறக்கணிக்கவில்லை. அவர் வெளிநாட்டில் உள்ளார். சட்டத்தரணிகள் ஊடாக நீதிமன்றத்தில் முறைப்படி கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அரசாங்கத்தின் உயர்மட்டத்தில் உள்ளவர்கள் பசிலுடன் தினமும் கதைக்கின்றனர். அவர்களின் ஆலோசனையின் பிரகாரம் வராமல் இருக்கின்றாரோ தெரியவில்லை - என்றார். (அ-ம-இ)

## படகோட்டிக்கு...

செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நயினாதீவில் இருந்து குறிகாட்டுவான் நோக்கி மீன்பிடிப் படகொன்றில் பயணித்த அதிபர் நடராசா மயூரன் கடற்கொந்தளிப்புக் காரணமாக கடலில் தவறிவீழ்ந்து உயிரிழந்தார். இந்த விடயம் தொடர்பில் குறித்த படகோட்டி கைது செய்யப்பட்ட நிலையில் அவர் ஊர்காவற்றுறை பதில் நீதிவான் நீதிமன்ற பதில் நீதவான் சாளினி ஜெயச்சந்திரன் முன்னிலையில் நேற்று முற்படுத்தப்பட்டார். இதன்போதே, படகோட்டியை எதிர்வரும் மூன்றாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (அ-ம-26)

## மருத்துவர்...

கல் செய்யப்பட்ட வழக்கு ஜூன் மாதம் 19ஆம் திகதி கட்டளைக்காகத் தவணையிடப்பட்டுள்ளது.

தன்னைத் தொந்தரவு செய்யும் வகையிலும், அவதூறுகளைப் பரப்பும் நோக்கிலும் செய்திகளையும், பரப்புரைகளையும் மேற்கொள்கின்றனர் என்ற குற்றச்சாட்டின் பேரில், நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா, மருத்துவர் ஜெயக்குமார் உட்பட இன்னும் சிலருக்கும் எதிராக தெல்லிப்பழைப் புற்றுநோய் பிரிவு மருத்துவர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு, யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்காக எடுக்கப்பட்டது. இதன்போதே, ஜூன் மாதம் 19ஆம் திகதி கட்டளை வழங்கப்படும் என்று நீதிமன்றம் தெரிவித்துள்ளது. வழக்குத் தொடுநரின் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி லக்சான் டயஸின் வழிகாட்டலில் சட்டத்தரணி கனகலிங்கம் கிஷோபனாவும், நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா இராமநாதன் சார்பில் சட்டத்தரணி கௌசல்யா நரேந்திரனும் முன்னிலையானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## புலிகளின்...

தோல்வியில் முடிந்துள்ளது. குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஷானி அபேசேகரவின் ஆலோசனைக்கு இணங்கவும், அவரது பிரசன்னத்துடனும் பொதுமகன் ஒருவரின் வீட்டு வளாகத்தில் இந்த அகழ்வுப் பணிகள் இடம்பெற்றன. அந்த வளாகத்தின் நான்கு பகுதிகளில் துளையிட்டுச் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்ட போதிலும் சான்றுப்பொருள்கள் எவையும் மீட்கப்படவில்லை. இதையடுத்து அகழ்வுப் பணிகள் கைவிடப்பட்டன. (அ-ம-110)

## வலி.வடக்கு...

வலி.வடக்கில் ஜே/248, 249, 251, 255 மற்றும் 256 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் தமது காணிகளை விட்டு இராணுவம் வெளியேற வேண்டும் என்று வலியுறுத்தி ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதன் தொடர்ச்சியாகவே ஆறாவது வெள்ளிக்கிழமையாக நேற்றும் இந்தப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. பலாலி கொமாண்டோ பங்களாவில் இருந்து பலாலி சந்திவரை அவர்கள் பேரணியிலும் ஈடுபட்டனர். நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், வலி.வடக்கு பிரதேசசபையின் தவிசாளர் ச.சுகிர்தன், வலி.தென்மேற்கு பிரதேசசபையின் தவிசாளர் தி.பிரகாஷ் ஆகியோரும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டனர். (அ-ம-20-26)

## ஹெலிகொப்டர்...

சியால் மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் சம்பவ இடத்துக்கு நேற்றுச்சென்ற கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர், தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் ஜெ.ரஜீவன், கடற்றொழில் அமைச்சரின் வடமராட்சிப் பகுதிக்கான இணைப்பாளர் உள்ளிட்டோர் மீனவர்களுடன் கலந்துரையாடல் நடத்தியிருந்தனர். இதன்போது, 'கடற்படைக் கலங்கள், ஹெலிகொப்டர்கள் மூலம் தமது தரப்பால் தேடுதல் இடம்பெற்றது' என்று அவர்கள் கூறியுள்ளனர். இதற்கு மீனவர்களும், மீனவ சங்கத்தினரும் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். 'அரச தரப்பால் எவ்வித நடவடிக்கையும் இடம்பெறவில்லை' என்று அவர்கள் தமது கடும் கண்டனத்தையும் பதிவுசெய்தனர். இதையடுத்து, அரச தரப்பினர் அங்கிருந்து வெளியேறிச் சென்றனர்.

'கடற்பகுதியில் கடந்த 24 மணிநேரமாகத் தேடுதல் நடத்தி வருகின்றோம். ஹெலிகொப்டர்கள் மூலம் தேடல் பணிகள் இடம்பெற்றிருந்தால் நிச்சயம் எமக்குத் தெரிந்திருக்கும். பொய்களை கூறி எம்மை முட்டாள்களாக்க அரச தரப்பு முற்படுகின்றது' என்று மீனவர்கள் ஊடகங்களிடம் தெரிவித்தனர். (அ-ம-100-26)

## காணாமற்போன...

முடிந்திருந்தன. மீனவர்கள் காணாமற் போனதாகக் கூறப்படும் கடற்பரப்பில், அவர்கள் பயன்படுத்தியதாகக் கூறப்படும் வலைத் துண்டுகள் மீட்கப்பட்டிருந்தன. அத்துடன், ஆழ்கடலில் படகொன்று மூழ்கியது போன்றுள்ளதாகவும் வடமராட்சி மீனவர்களுக்குத் தகவல்கள் கிடைத்திருந்தன. இதையடுத்து, இரண்டாம் நாளான நேற்றையதினம் 24 படகுகளில் சுழியோடிகள் சகிதம் தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெற்றன. எனினும், எந்தப் பயனும் ஏற்படவில்லை. இதையடுத்து இரண்டாம் நாள் தேடல் பணிகள் கைவிடப்பட்டுள்ளன. மூன்றாம் நாளான இன்றும் தேடுதல் பணிகள் இடம்பெறவுள்ளன. (அ-ம-20-100)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஐ.பி.எல். தொடர்

# ராஜஸ்தானை தோற்கடித்து இறுதியாட்டத்தில் குஜராத்!

## நாளை பெங்களூருடன் மோதல்



ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற இரண்டாவது தகுதியாட்டத்தில் ராஜஸ்தானை வீழ்த்தி இறுதி ஆட்டத்துக்குத் தகுதிபெற்றது குஜராத்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் அணி முதலில் முதலில் துடுப்பெடுத் தாடத் தீர்மானித்து 6 விக்கெட்டுக்களை இழந்து 214 ஓட் டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக சூரிய வன்ஸி 96 ஓட்டங்களையும், ஜடேஜா 45 ஓட்டங்களையும், பெரீரா 38 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் ஹோல்டர், ரபாடா இருவரும் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினார்கள். பதிலுக்குக் களமிறங்கிய குஜராத் அணிக்கு ஆரம்ப வீரர்களான கில் மற்றும் சாய் சுதர்சன் இருவரும் வலுவான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தனர். இலக்குச் சரிவில்லாமல் 150 ஓட்டங்களை; க் கடந்தது குஜராத். 58 ஓட்டங்களுடன் சாய் சுதர்சன் ஆட்டமிழந்தாலும், மறுமுனையில் நிதானமாக விளையாடி சதம் கடந்தார் அணித் தலைவர் கில். அவர் 104 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தாலும் எட்டுப் பந்துகள் மீதமிருக்கையில் எந்தப் பதற்றமும் இன்றி வெற்றிபெற்றது குஜராத். நாளை நடைபெறவுள்ள இறுதியாட்டத்தில் குஜராத் பெங்களூர் அணிகள் மோதவுள்ளன. (ம)


## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் அச்சுவேலியிலிருந்து பருத்தித்துறை வீதி செல்லும் பிரதான வீதியிலிருந்து **200m** தூரம். 15 பரப்புக் காணி மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உள்ளது.
ஒரு பரப்பின் விலை ஐந்து இலட்சம் மட்டும்.
அச்சுவேலி பஸ் நிலையம் **500m** தூரம்.
பார்வையிடும் நேரம் : காலை 8.30 தொடக்கம் மாலை 6.30 வரை
குடியிருப்புக்கள் உள்ள பகுதி. நல்ல சூழல்.

**தொடர்பு: 077 623 424**

(CS 31895) A





## வீடு வாடகைக்கு உண்டு

**யாழ்ப்பாணத்தில் 5ம் குறுக்குத் தெருவில் பிரதான வீதிக்கு அருகாமையில் அமைந்துள்ள 2 வீடுகள் வாடகைக்கு உண்டு.**

தொடர்புகளுக்கு: **077 900 4515**

(CS/61545) J-1


# சிப்பியாறு அந்தோனியாருக்கு இன்று கொடியேற்றம்

மன்னார்,மே 30

மன்னார் சங்குப்பிட்டி வீதியில் அமைந்துள்ள சிப்பியாறு புனித அந்தோனியார் ஆலயத்தின் திருவிழாவை முன்னிட்டு இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றம் இடம்பெறும்.

தொடர்ந்து நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்குத் திருப்பலியும், தொடர்ந்து முதலாம் திகதி திங்கட்கிழமை மாலை 5 மணிக்குத் திருப்பலி மற்றும் நற்கருணை ஆராதனையும், மறுநாள் செவ்வாய்க்கிழமை திருவிழாத் திருப்பலிகள் காலை 6 மணிக்கும் காலை 7.30 மணிக்கும், முற்பகல் 10.30 மணிக்கும், மாலை 3 மணிக்கும், மாலை 5 மணிக்கும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. முற்பகல் 10.30 மணிக்கு நடைபெறும் திருப்பலி, மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி பி. கிறிஸ்துநேசன் அடிகளார் தலைமையில் கூட்டுத்திருப்பலியாக இடம்பெறும். ஆலயத்தின் திருத்தலப் பெருவிழாவுக்கான ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் கடந்த புதன்கிழமை ஆலயத்தில் நடைபெற்றது. இதன்போது பக்தர்களுக்கான பாதுகாப்பு,சுகாதாரம், நீர் வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகள் உறுதி செய்யப்பட்டதுடன், இந்தப் பகுதியில் மதுபானப்பாவனை மற்றும் விற்பனை விலைக்கட்டுப்பாடுகள் தொடர்பான இறுக்கமான தீர்மானங்களும் எடுக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-60)


## காணி விற்பனைக்கு

தனங்கிளப்பு பகுதியில் அமைந்துள்ள 60 நிலப்பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பிரித்தும் வழங்கப்படும்.

* 30 வருடங்களுக்கு மேற்பட்ட தோம்பு வரலாறு கொண்டது.
* விலை நேரில் பேசித் தீர்மானித்து கொள்ளலாம்.
* பார்வை நேரம்: **8 AM - 5PM**

**தொடர்பு:**

**075 5461 666**
**077 6481 664**

(CS 31896) A



## முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
19 • 07 • 1942



மறைவு
11 • 06 • 2025

**அமரர் விசுவலிங்கம் வைத்திலிங்கம்**

**திதி: வைகாசி பூரணை**

ஐயா ! ஐயா ! என்று
அனுதினமும் அழைத்திருந்தோம்.
அன்பிலும் பண்பிலும்
குறைவின்றி நாம் வளர்ந்தோம்.

பட்ட துன்பம் யாவும்
பாசத்தில் நாம் மறந்தோம்.
பாரினிலே பிரிந்தாலும்
உம் பெயரில் இணைந்தோம்.

வயதாகி நீர் சென்றாலும்
ஏற்குதில்லை அறிவு.
நினைக்கும் போதெல்லாம்
கனக்குது எம் மனது.

என்றும் உங்களுக்காக
விழிநீர் அஞ்சலிகள்.
ஓம் சாந்தி.. சாந்தி... சாந்தி..

4ம் வட்டாரம்,
மண்கும்பான் கிழக்கு,
வேலணை.

(CS/31857) J-1

**குடும்பத்தினர்**


செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி : news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.05.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org